இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு

குடிவரவு மற்றும் குடியகழ்வு திணைக்களம்

# விலைக்கோரலுக்கான அழைப்பு

## குடிவரவு மற்றும் குடியகழ்வுத் திணைக்களத்திற்கு 100 எண்ணிக்கையான மேசைக் கணனிகளை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுவதற்கான பெறுகை

**விலைக்கோரல் இல.: DIE/PRO/04/2023/22**

1. குடிவரவு மற்றும் குடியகழ்வுத் திணைக்களத்திற்கு 100 எண்ணிக்கையான மேசைக் கணனிகளை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுவதற்கான பெறுகைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து குடிவரவு மற்றும் குடியகழ்வு திணைக்களத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரைக் குறியிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
2. விலைக்கோரலானது தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் (NCB) மூலம் நடாத்தப்படும்.
3. 2023.07.11ஆம் திகதி முதல் 2023.08.02ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத கட்டணமாக எட்டாயிரம் ரூபாவை (8,000.00 ரூபா) செலுத்திய பின்னர், பத்தரமுல்ல, ஸ்ரீ சுபுத்திபுர வீதி, ''சுஹுருபாய'', 05ஆம் மாடி, குடிவரவு மற்றும் குடியகழ்வு திணைக்கள பெறுகைப் பிரிவின் பிரதி கட்டுப்பாட்டாளருக்கு (பெறுகைகள்) எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணமாகவிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை 0112-101559 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையும் பெற்றுக்கொள்ளலாம். விலைமனு ஆவணங்களை 2023.07.11ஆம் திகதியிலிருந்து 2023.08.02ஆம் திகதியன்று வரையும் மேலேயுள்ள 3ஆம் பந்தியின் முகவரியில் குறித்துரைக்கப்பட்டுள்ள அமைவிடத்திலும் **www.immigration.gov.lk** என்ற திணைக்களத்தின் இணையதளத்தினூடாகவும் இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. உரியமுறையில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என தயாரிக்கப்பட்டு தனித்தனியான தபாலுறைகளில் உள்ளிட்டு அதன் பின்னர், அவ்விரு உறைகளையும் வேறொரு தபாலுறையில் உள்ளிட்டு இயைபுடைய ஒப்பந்தப் பெயர் மற்றும் IFB இலக்கம் என்பவற்றை முத்திரைக் குறியிடப்பட்ட இந்த தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக குறிப்பிடப்பட்டு 2023.08.03ஆம் திகதியன்று பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது 3ஆம் பந்தியில் குறிந்துரைக்கப்பட்ட முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் முதல் அல்லது பெறுகையாளரினால் நிர்ணயிக்கப்பட்ட எந்தவொரு நீடிக்கப்பட்ட நாள் முதல் எழுபத்தேழு (77) நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்ட பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.

   **தலைவர்,**<br>**திணைக்கள பெறுகைக் குழு,**<br>**குடிவரவு மற்றும் குடியகழ்வு திணைக்களம்,**<br>**05ஆம் மாடி, ''சுஹுருபாய'',**<br>**ஸ்ரீ சுபுத்திபுர வீதி, பத்தரமுல்ல.**

6. 2023.07.19ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பத்தரமுல்ல, ஸ்ரீ சுபுத்திபுர வீதி, ''சுஹுருபாய'', 05ஆம் மாடி, குடிவரவு மற்றும் குடியகழ்வு திணைக்களத்தில் விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று இடம்பெறும்.

**தலைவர்,**<br>**திணைக்கள பெறுகைக் குழு,**<br>**குடிவரவு மற்றும் குடியகழ்வு திணைக்களம்,**<br>**05ஆம் மாடி, ''சுஹுருபாய'',**<br>**ஸ்ரீ சுபுத்திபுர வீதி, பத்தரமுல்ல.**